**<u>சுருக்கம்</u>**

இந்து சமய அறநிலையத்துறை– திருக்கோயில் வீடுகள், நிலங்கள், கடைகள் மற்றும் காலி இடங்கள்– வாடகை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட அரசாணையில் சில மாறுதல்கள் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**<u>தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (அ.நி.4–2) துறை</u>**

**<u>அரசாணை (நிலை) எண்.456</u>** **நாள் : 9.11.2007**

**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை (நிலை) எண் 56, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள். 19.2.1998.
2. அரசாணை (நிலை) எண். 353, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 4.6.1999.
3. அரசு கடிதம் எண்.6129/அநி.4–2/2000–1 தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 27.4.2000.
4. அரசு கடிதம் (நிலை) எண்.169, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள் 8.8.2001.
5. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை கடித ந.க.எண்.744/1999/ எம் 3 நாள் 22.10.2007.

...

**ஆணை:-**

இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலுக்குச் சொந்தமான வீடுகள், மனைகள், கடைகள் மற்றும் காலியிடங்கள் ஆகியவற்றிற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்து முதன் முதலாக அரசாணை (நிலை) எண் 56, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 19.2.1998–ல் வெளியிடப்பட்டது. பின்னர் அவற்றில் உரிய தளர்வுகள் செய்யப்பட்டு அரசாணை (நிலை) எண். 353, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 4.6.1999ல் திருத்திய ஆணை வெளியிடப்பட்டது. இதிலும் வாடகை அதிகமாக இருப்பதாக அரசுக்கு பல்வேறு புகார்கள் வரப்பெற்றதன் அடிப்படையில் மேற்படி நியாயவாடகை நிர்ணயம் குறித்து அரசின் மறுபரிசீலனை முடியும் வரை 27.4.2000ல் மேற்படி அரசாணையின் செயல்பாடுகளை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் ஆணையர் இந்து சமய அறநிலையத்துறை அவர்கள் அறிவுறுத்தப்பட்டார். அதன் பின்னர் அரசின் நீண்ட பரிசீலனைக்குப்பின்னர் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட ஆணையை மீண்டும் 1.11.2001 முதல் செயல்படுத்துமாறு நான்காவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் ஆணையிடப்பட்டது. மேலும் வாடகை நிர்ணயக்கோட்பாடுகள் குறித்து, 1959ம் ஆண்டு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டத்தின் பிரிவு 34–க்கு தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டு 10.5.2003 முதல் அமல்படுத்தப்பட்டது.

2. இந்நிலையில், மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அவர்கள் திருக்கோயில்களுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கடைகள், காலியிடங்கள் ஆகியவற்றிற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஏற்கனவே நடைமுறையிலுள்ள அரசாணை (நிலை) எண் 353, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 4.6.1999ல் சில திருத்தங்கள் மேற்கொள்ள 17.10.2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் குழு கூட்டத்தில் இப்பொருண்மை தொடர்பாக கீழ்க்காணுமாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, இத்தீர்மானத்தின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள உரிய அரசாணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

> "திருக்கோயிலுக்குச் சொந்தமான மனைகள் மற்றும் கட்டிடங்களில் குடியிருந்து வருபவர்களுக்கு தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை விகிதம் அதிகமாக உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, குடியிருப்பவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நியாய வாடகை விகிதமான 0.20 விழுக்காட்டினை, 0.10 விழுக்காடாக குடியிருப்பாக பயன்படுத்தப்படும் இனங்களில் மட்டும் குறைத்து சீரமைக்கலாம் என்றும், மேலும், பொதுவாக அனைத்து இனங்களுக்கும் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை நிர்ணயம் செய்யப்படும் நியாய வாடகை உயர்வான 33.3 விழுக்காட்டினை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 விழுக்காடாகக் குறைத்து நிர்ணயிக்கலாம் என்றும், இந்த வாடகை விகிதத்தை 2001–ஆம் ஆண்டு நிலமதிப்பு நிலவரத்தின் அடிப்படையில் கணக்கிட்டு, 2001–ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 விழுக்காடு அளவில் வாடகையை உயர்த்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது."

3. இந்து சமய அறநிலையத்துறை, சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் அவர்களின் பரிந்துரையை அரசு கவனமுடன் பரிசீலித்து, திருக்கோயில்களுக்குச் சொந்தமான வீடுகள், மனைகள், கடைகள் மற்றும் காலியிடங்கள் ஆகியவற்றிற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஏற்கனவே நடைமுறையிலுள்ள அரசாணை (நிலை) எண் 353, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 4.6.1999 சிலகால நிறுத்தி வைத்தலுக்குப்பிறகு மீண்டும் 1.11.2001 முதல் செயல்படுத்தப்பட்ட நிலையில், மேற்படி அரசாணையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியாய வாடகை விகிதமான 0.20 விழுக்காட்டினை 0.10 விழுக்காடாக குடியிருப்பவர்களுக்கு மட்டும் குறைக்கலாம் என்றும், மேலும் அனைத்து இனங்களுக்கும் பொதுவாக மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை செய்யப்படும் நியாய வாடகை உயர்வான 33.3 விழுக்காட்டினை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 விழுக்காடாகக் குறைத்து நிர்ணயம் செய்யலாம் என்றும் இந்த வாடகை விகிதத்தை 2001–ஆம் ஆண்டு நிலமதிப்பு நிலவரத்தின் அடிப்படையில் கணக்கிட வேண்டும் என்று ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாணை (நிலை) எண் 353, தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத்துறை நாள் 4.6.1999, 1.11.2001 நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், இதனை 1.11.2001 ஆம் நாளிலிருந்து கணக்கிடலாம் என்றும், அதன்பிறகு அவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையுடன் 15 விழுக்காடு கூடுதல் செய்து 1.7.2004–லிருந்து கணக்கிடவும், அதன்பின்னர் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 விழுக்காடு கூடுதல் அளவில் வாடகையை உயர்வு செய்து நிர்ணயிக்கலாம் என்றும், மேலும் திருக்கோயிலுக்குச் சொந்தமான மனைகள், வீடுகள், காலியிடங்கள் மற்றும் கடைகளுக்கு முதன்முதலாக வாடகை நிர்ணயம் செய்து 19.2.1998 நாளிட்ட வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அரசாணை(நிலை) எண். 56, 1998ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்ட நிலையில் மேற்கண்ட வாடகை நிர்ணயம்

ஆலோசனைக் குழு முடிவின்படி 2001 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்படும் வாடகையை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் 15 விழுக்காடு குறைத்து 1.7.98 முதல் 30.10.2001 வரை திருக்கோயில் இடங்களை குடியிருப்பாக பயன்படுத்தும் இனங்களில் மட்டும் வாடகையை நிர்ணயம் செய்யலாம் என்றும் இவ்வாறு நிர்ணயம் செய்யும்போது கூடுதலாக வாடகை வசூலிக்கப்பட்டிருப்பின் அவற்றை கேட்பிலிருந்து சரிக்கட்டலாம் என்றும் மேற்கண்டவாறு வாடகையை மறு நிர்ணயம் செய்யும்போது ஏற்கனவே வாடகை உயர்வு தொடர்பான வழக்குகள் தொடர்ந்திருக்கும் குத்தகைதாரரை அவற்றைத் திரும்பப்பெற அறிவுரை வழங்கலாம் என்றும் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.இராசேந்திரன்,
அரசு செயலாளர்

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை, சென்னை—34.

நகல்
இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை—9
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை—9
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையைச் சார்ந்த அறநிலையப் பிரிவுகள்
அனைத்து இணை ஆணையர்கள், இந்து சமய அறநிலையத்துறை (சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் வழியாக)
இ.கோ./உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்